**<u>STARTING TIME 11.28 A.M</u>**

**<u>IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.</u>**

**<u>O.S. No. 6/2025</u>**

Deposition of **<u>P.W.3</u>** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. R. Suresh Babu, Assistant of this court, on 03.07.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **சாமிநாதன்** Father's Name :

Address :

Calling : Age :

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால், எதுவும் படிக்கவில்லை. என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், ரத்தனவேலுவின் மகன்கள் குணசேகரன், நரசிம்மன், தெய்வானை, ராஜம்மாள் ஆகியோர்கள் ரத்தனவேலுவின் மற்றொரு மகன் பாலகிருஷ்ணனை விட்டுவிட்டு சொத்துக்களை எழுதிக் கொண்டார்கள், அதனால் பாலகிருஷ்ணனுக்கும் சொத்து வேண்டும் என்று, ரத்தினவேல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2. ரத்தனவேலுவின் மகன்கள் மற்றும் மகள்களில் பாலகிருஷ்ணனை தவிர மற்றவர்களுக்கு யார் செட்டில்மெண்ட் பத்திரங்களை எழுதி வைத்தது என்றால்,

ரத்தினவேலுவே எழுதி வைத்தார். அந்த செட்டில்மெண்ட் பத்திரங்களை ரத்தினவேலு எந்த வருடம் எழுதினார் என்றால் அது பற்றி தெரியவில்லை. தாவா சொத்துக்களின் சர்வே எண் தெரியுமா என்றால், தெரியாது. நான்கு பேருக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரங்களில் என்னென்ன சர்வே நம்பரில் உள்ள சொத்துக்கள் உள்ளது என்று தெரியுமா என்றால், தெரியாது.

3. ரத்தினவேலு எனக்கு என்ன உறவு என்றால், சித்தாப்பா முறை ஆகும். அதனால் ரத்தினவேலுவின் மகன்கள் மற்றும் மகள்கள் எனக்கு நெருங்கிய உறவினர்கள் என்றால், சரிதான். நான் கையெழுத்து செய்ததாக சொல்லும் உயில் ஆவணம் எந்த தேதியில், மாதம், வருடத்தில் எழுதப்பட்டது என்றால், தேதி, மாதம் நினைவில்லை, 5 வருடம் முன்பு எழுதப்பட்டது. மேற்படி உயில் யார் முன்னிலையில் எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்றால், வழக்கறிஞர் திரு.முரளி என்பவர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. அப்போது யார், யார் உடனிந்தார்கள் என்றால், ரத்தினவேல் மற்றும் அவரது மகன்கள் நரசிம்மன், குனசேகர், பாலகிருஷ்ணன், சாட்சிகளான நான், சாமிநாதன் மற்றும் ஆறுமுகம் ஆகியோர் இருந்தோம். ரத்தினவேல் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்றதாக சொல்வது பொய் என்றும், அந்த சமயத்தில் அவர் கையெழுத்து செய்ய முடியாத நிலையில் படுத்த படுக்கையாக இருந்தார் என்றால், சரியல்ல, ரத்தினவேல் தான் எங்களை அழைத்து சென்றார்.

4. நான் சொல்லும் உயிலில் ரத்தினவேல் எத்தனை கையெழுத்து செய்தார் என்றால், கையெழுத்து செய்யவில்லை, கைநாட்டு தான் வைத்தார். நான் எத்தனை ஆவணங்களில் கைநாட்டு வைத்தேன் என்றால், கைநாட்டு வைக்கவில்லை சாட்சியாக கையெழுத்து தான் செய்தேன், எத்தனை ஆவணங்கள் என்று தெரியவில்லை.

5. நான் சொல்லும் உயிலை தயாரித்ததாக சொல்லும் வழக்கறிஞர் முரளி

அவர்கள் அதில் கையெழுத்து செய்தாரா என்றால், அது பற்றி தெரியவில்லை. அந்த உயிலை சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று பதிவு செய்தார்களா என்றால், அது பற்றி தெரியாது.

6. ரத்தினவேல் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரங்களில் இருந்த சொத்துக்களும் நான் சொல்லும் உயிலில் இருந்த சொத்தும் ஒரே சொத்தா என்றால், ரத்தினவேல் சம்பாதித்த சொத்து தான் உயியில் எழுதி வைத்தார். யாருக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் இருந்த சொத்து உயிலில் எழுதப்பட்டது என்றால், பாலகிருஷ்ணனுக்கு எழுதி வைத்த சொத்து தான் உயிலில் உள்ளது. எனக்கு தாவா சொத்துக்களை குறித்து எதுவும் தெரியாது என்றும், வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து 2013-ம் ஆண்டு ரத்தினவேல் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துவிட்டார் என்றால், சரியல்ல. ரத்தினவேல் உடல்நிலை சரியில்லாத சமயத்தில் தாவா சொத்தை அபகரிக்க வேண்டி உயிலை போலியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறுவிசாரணை இல்லை.

**ENDING TIME 11.49.A.M.**

**(Sd/-. G. Yuvaraj)**

**Special Subordinate Judge,**
**Special Sub Court for L.A.O.P. Cases,**
**Arakkonam.**